வாக்குமூலம்
குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்
வழக்கு எண் MCOP. No. 56/2025
வழக்கு சாட்சி – எ.ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திரு.ஞானபிரகாஷ் | தொழில் | :: TNSTC, ஓட்டுநர் |
| த/க பெயர் | :: கண்ணையா | வயது | :: 55/2026 |
| கிராமம் | :: மதுரை, ஒத்தக்கடை | | |
| தாலுகா | :: மதுரை | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 14.08.2025.

**முதல் விசாரணை** (நேரம் : நண்பகல் 12.30 மணி)

நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் ஓட்டுநராக பணியாற்றி வருகிறேன். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்துகள் என்னுடையவைதான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது. எதிர்மனுதாரரை பொறுத்து மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –**

வாகன விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் என் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதனால் என் மீது துறைரீதியான நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த சமயம் நான் பேருந்தை சுமார் 80 கி.மீ வேகத்தில் ஓட்டி சென்றேன் என்றால் சரியல்ல, 40 கி.மீ வேகத்தில் தான் ஓட்டி சென்றேன். மதுரையிலிருந்து 09.50 மணிக்கு பேருந்தை எடுத்ததாக சொல்லும் நிலையில் சுமார் 60 கி.மீ வேகத்தில் வந்தால் தான் 11.50 மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்திருக்க முடியும் என்றால் Byepass–ல் வரும்போது 60 கி.மீ வேகத்தில் வந்தேன், நகருக்குள் வரும்போது மெதுவாக தான் வந்தேன். மனுதாரர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் வலதுபக்க ஹேண்டில்பார் பேருந்தின் இடதுபக்கம் இடித்துள்ளதாக மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு எனது

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.04.02 17:08:21 +0530

பேருந்தில் இருசக்கர வாகனம் இடிக்கவில்லை. இருசக்கர வாகனத்தின் ஹேண்டில்பார் பேருந்தின் மீது இடித்தாலோ, பேருந்தின் டையர் யார் மீதும் ஏறி இறங்கினாலோ பேருந்தில் பெரிய அளவில் எந்தவித சேதமும் ஏற்படாது என்றால் சரியல்ல. மனுதாரர் ஓட்டி சென்ற வாகனத்தின் பின்னால் அமர்ந்து சென்ற ஜெயா ஆறுமுகம் என்பவர் மீது நான் ஓட்டி சென்ற பேருந்தின் பின்பக்க டையர் ஏறி இறங்கியதில் தான் அவர் இறந்ததாக குற்ற வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மனுதாரர் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் ஹேண்டில்பார் பேருந்தில் பட்டதா இல்லையா என்று ஆய்வு செய்ய தடயவியல் நிபுணருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. வாகன விபத்து சம்பந்தமாக விபத்திற்கு நான் சம்பந்தமில்லை என்று காவல் நிலையத்திலும் புகார் கொடுத்தேன், எங்கள் உயர் அதிகாரிகளிடமும் அவ்வாறு புகார் கொடுத்தேன். அவ்வாறு புகார் கொடுத்ததாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை, அதற்கான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர் சாலைவிதிகளை கடைபிடித்து சாலையின் இடது ஓரமாக தான் சென்றார் என்றும், நான் தான் பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று மனுதாரர் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் கோரியுள்ள இழப்பீடு தொகையினை நான் பணி செய்யும் எதிர்மனுதாரர் நிறுவனம் தான் கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை .**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.04.02 17:08:30 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.